GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT
LIBRARY

Register No.

**TA5A**

**5737–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 வார்த்தைகளில் விடையளிக்கவும்.

1. What is the effect of fraud and mistake committed under the law of limitation?

   காலவரம்பு சட்டத்தின் கீழ் மோசடி மற்றும் தவறுகை ஆகியவற்றின் விளைவுகளைக் கூறுக.

2. Explain the process of service of summons to defendants and witnesses.

   சாட்சிகளுக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணையை சார்வு செய்யும் முறையினை விளக்குக.

3. Explain the various grounds on which a court can review its own judgement.

   ஒரு நீதிமன்றம் தனது தீர்ப்புரையினை மறு ஆய்வு செய்வதற்கான காரணங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 வார்த்தைகளில் விடையளிக்கவும்.

4. What are the powers of appellate court in hearing appeals?

   மேல்முறையீட்டை விசாரணை செய்யும் பொழுது மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கான அதிகாரங்கள் யாவை?

5. What are the powers of an executing court while executing decrees?

   நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு தீர்ப்பாணைகளை நிறைவேற்றும் போது என்ன அதிகாரங்கள் உள்ளன?

6. Who is an indigent person? Discuss in detail the procedure for filing a suit by an indigent person?

   வறியவர் யார்? வறியவரால் வழக்கொன்று தாக்கல் செய்யப்படுவதற்கான நடைமுறை விதிகளை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Affidavit

சத்தியபிரமாண வாக்குமூலம்

(b) Jurisdiction

அதிகார எல்லை

(c) Pleadings

வழக்குரை

(d) Commissioner

ஆணையர்

(e) Kinds of decrees

தீர்ப்பாணையின் வகைகள்

(f) Set off

சரியீடு

(g) Suits in civil nature.

உரிமையியலான வழக்குகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Magesh borrowed a sum of Rs.25,00,000 on a promissory note from Nagesh. The promissory note was executed on 3.2.23. Nagesh died on 3.4.23 leaving behind his son Suresh aged 12 years. Now Suresh wants to file a suit against Magesh for recovery of money. Examine the validity of the case. Give reasons.

திரு. மகேஸ் என்பவர் ரூ.25,00,000 கடனுறுதிச்சீட்டு மூலம் திரு. நாகேஷ் என்பவரிடமிருந்து வாங்குகிறார். கடனுறுதிச்சீட்டு 3.2.23 அன்று எழுதப்பட்டது. நாகேஷ் 3.4.23 அன்று இறந்துவிட்டார். அவரது 12 வயதுள்ள மகன் சுரேஷ் பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக திரு. மகேஷ்க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முனைகிறார் வழக்கின் செல்லும் தன்மையை ஆராய்க. காரணங்களைக் கூறவும்.

9. An ex parte decree is passed against Ragavan. The time prescribed for filing an application to set aside the decree is 30 days but Ragavan is approaching the counsel after 150 days. Advise him.

ராகவன் என்பவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாணை வழங்கப்படுகிறது. அந்த ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி 30 நாட்களுக்குள் மனுதாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் ராகவன் வழக்குரைஞரை 150 நாட்கள் கழித்து அணுகுகிறார். ராகவனுக்கு அறிவுரை வழங்குக.

10. Arun files a suit against Varun for Rs.50,000 in court at Madurai. The court passes a decree for Rs.40,000. Arun files an application to amend the decree. Can the court amend the decree.

அருண் என்பவர் வருண்-க்கு எதிராக மதுரை நீதிமன்றத்தில் ரூ.50,000 கேட்டு வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றம் ரூ.40,000-க்கான தீர்ப்பு வழங்குகிறது. அருண் மனு ஒன்றை தாக்கல் செய்து தீர்ப்பை மாற்றக் கோருகிறார். நீதிமன்றம் அந்த மாற்றத்தை செய்ய முடியுமா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2...
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5B**

**5738–23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three – year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : 2 ½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் எறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the procedure to be observed in the trial of summons cases and distinguish it with that of warrant case.

   ஓர் அழைப்பாணை வழக்கில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விவாதித்து அதனை பிடியாணை வழக்கு விசாரணையில் இருந்து வேறுபடுத்திக் காட்டவும்.

2. What is the procedure to be followed by magistrate while recording of confession and statements.

   குற்ற ஏற்புரையை மற்றும் அறிக்கைகள் பதிவு செய்யும் பொழுது ஓர் நீதித்துறை நடுவர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் யாவை?

3. Explain the origin, development and objects of the Probation of Offenders Act, 1958.

   நன்னடத்தைச் சட்டம் 1958-ன் தோற்றம், வளர்ச்சி மற்றும் நோக்கத்தினை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் எறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the various functionaries established under the Criminal Procedure code and state their powers and duties.

   குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான செயல்பாட்டாளர்களை விவரித்து அவர்களின் அதிகாரம் மற்றும் கடமைகளைக் கூறுக.

5. State the contents of charge. When the accused can be tried for joinder of charges.

குற்றச்சாட்டின் உள்ளடக்கங்களை கூறுக. எப்பொழுது குற்றம்சாட்டப்பட்டவர் ஒருங்கிணைந்த குற்றச்சாட்டின் கீழ் வழக்கில் விசாரணை செய்ய முடியும்?

6. Discuss the rights of the arrested person.

கைது செய்யப்பட்ட நபரின் உரிமைகளை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Directorate of Prosecution.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்.

(b) Compoundable offence.

இசைந்து தீர்க்கக் கூடிய குற்றங்கள்.

(c) Prosecution for defamation.

அவதூறுக்காக வழக்குத் தொடர்தல்.

(d) Discharge.

விடுவித்தல்.

(e) Inquest.

இறப்பு ஆய்தல்.

(f) Plea Bargaining.

வழக்கு பேரம்.

(g) Inherent power of a Criminal Court.

குற்றவியல் நீதிமன்றத்திற்கான உள்ளார்ந்த அதிகாரம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', is an accused of a theft on one occasion, and of causing grievous hurt on another occasion. Discuss about the provisions and procedure for charges and trial.

ஒரு சமயத்தில் திருடியதாகவும், வேறொரு சமயத்தில் கொடுங்காயம் விளைவித்ததாகவும் 'அ' குற்றஞ்சுமத்தப்படுகிறார். குற்றச்சாட்டு மற்றும் நீதிமன்ற விசாரணையின் பிரிவுகளைப் பற்றியும் நடைமுறைகளைப் பற்றியும் விளக்குக.

9. ‘A’ draws a picture of Z running away with B’s watch, intending it to be believed that Z stole B's watch. Does it amount to defamation.

‘ஆ’ - வின் கைக்கடிகாரத்தை ‘ஔ’ திருடினார் என நம்பும்படி செய்யும் உட்கருத்துடன் ‘ஆ’ - வின் கைக்கடிகாரத்துடன் ‘ஔ’ ஓடுவதாக ஒரு சித்திரத்தை ‘அ’ வரைகிறார். இத்தகைய செயல் அவதூறு ஆகுமா?

10. ‘A’ was punished by fine for an offence. He wants to go for an appeal. Advise him.

‘A’ என்பவர் ஒரு குற்றத்திற்கு தண்டனையாக அபராதம் பெற்றார். அவர் மேல்முறையீடு செய்யவும் விரும்பினார். ஆலோசனை வழங்கவும்.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5C**

**5754–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the role of public participation and awareness in Environmental Governance.

   சுற்றுச்சூழல் ஆளுமையில் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு குறித்து விவாதிக்க.

2. Explain the power of the central government in establishing sanctuaries and national parks.

   வனவிலங்கு சரணாலயம் மற்றும் தேசிய பூங்காக்கள் அமைக்கும் மத்திய அரசின் அதிகாரங்களை விவரிக்கவும்.

3. Examine the significance of the Coastal Regulation Zone notification.

   ஒழுங்குபடுத்தப்பட்ட கடலோர மண்டலம் குறித்த அறிக்கையின் முக்கியத்துவத்தை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Analyse the obligation for relief under no fault liability.

   குற்றமற்ற பொறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் நிவாரணம் வழங்கும் கடப்பாட்டினை கூர்ந்து ஆய்க.

5. Define "Biological Diversity". What are the steps taken at the national level to conserve biodiversity.

பல்லுயிர் பெருக்கம் என்பதை வரையறு. தேசீய அளவில் பல்லுயிர் பெருக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

6. "Right to wholesome environment is fundamental right" – Comment.

"முழுமையான சுற்றுப்புற சூழ்நிலைக்கான உரிமையானது ஒரு அடிப்படை உரிமையாகும்" - விமர்சிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Village Forest

கிராமக் காடுகள்

(b) Green Tribunal

பசுமை தீர்ப்பாயம்

(c) Water cycle

நீர் சுழற்சி

(d) Taj Mahal Case

தாஜ் மஹால் வழக்கு

(e) Global Warming

உலகளாவிய வெப்பயேற்றம்

(f) Inter – Generational equity

தலைமுறைகளுக்கிடையேயான தகைமை நெறி

(g) Endangered species

அழிந்து வரும் இனங்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government of Andra Pradesh allotted a portion of land from a zoological garden for the construction of a five star hotel. A Public Interest Litigation was filed on the ground that the government's decision violates the provisions of the Forest Act-Decide.

ஆந்திர பிரதேச அரசு உயிரியல் பூங்காவின் ஒரு பகுதி நிலத்தினை ஐந்து நட்சத்திர விடுதி கட்டுவதற்காக ஒதுக்கியது. அரசின் இந்த முடிவு காடுகள் சட்டத்தினை மீறுவதாகக் கூறி பொது நல வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்க.

9. A government dump yard at "Pallikaranai" did not follow standards of disposing waste. "Waste Watch" and activist group filed a case against the authorities for non compliance of standards which pose danger to life and health of residents. – Decide.

பள்ளிக்கரனையில் உள்ள அரசு குப்பைக்கிடங்கில் குப்பைகளை தரக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றாமல் வெளியேற்றப்பட்டது. "வேஷ்டு வாச்சு" என்ற இயக்கம் அங்கு வசிப்பவர்களின் வாழ்வு மற்றும் உடல் நலனுக்கு பாதிப்பு ஏற்படும் என்று தரம் பின்பற்றாத அதிகாரிகளை எதிர்த்து வழக்கிட்டது - தீர்மானிக்க.

10. A welfare association filed a petition before the district magistrate against the corporation to take necessary action to stop the stench caused by open drain. The municipality pleaded want of funds-decide.

ஒரு நல சங்கம் தங்கள் பகுதியில் திறந்த சாக்கடையால் துர்நாற்றம் வீசுவதை அகற்றக் கோரி மாநகராட்சிக்கு எதிராக மாவட்ட நடுவரிடம் மனு ஒன்றினைக் சமர்பித்தது. போதிய நிதி வசதி இல்லை என மாநகராட்சி வாதாடியது. தீர்மானிக்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 20
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5D** **5739–23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Bonus and explain the "full bench formula of bonus". When can an employer refuse to pay bonus to his workmen?

   மீதூதியம் என்பதை வரையறுத்து, மீதூதியம் குறித்த 'முழு நீதிப் பேராயத்தின்' வழிகாட்டுதலை விளக்குக. எப்பொழுது முதலாளி தனது பணியாளர்களுக்கு மீதூதியம் வழங்க மறுக்கலாம்?

2. Explain how the Employees' State Insurance Fund is constituted? State the various benefits available to a worker under the ESI Act, 1948.

   தொழிலாளர் அரசு காப்பீடு நிதி எவ்வாறு அமைக்கப்படுகிறது? 1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீடு சட்டத்தின் படி ஒரு தொழிலாளருக்கு கிடைக்கக் கூடிய பலன்களை எடுத்துரைக்க.

3. Discuss the nature of the right of maternity benefit under the Maternity Benefit Act, 1961 after recent amendment.

   மகப்பேறு நலன்கள் சட்டம், 1961-ன் கீழ் மகப்பேறு நலன்கள் பெறும் உரிமையின் இயல்பை சமீபத்திய சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the nature and scope of the Employees' Provident Fund Act, 1952.

   1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் அளாவுகை மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

5. State the restrictions under the Factories Act, 1948 for employment of women and children.

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகளை பணியில் ஈடுபடுத்துவது குறித்த கட்டுப்பாடுகளைக் கூறுக.

6. Explain the appointment, jurisdiction and powers of a commissioner appointed under the Employee's Compensation Act, 1923.

1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டத்தின் கீழ் ஆணையரின் நியமனம், ஆள்வரை மற்றும் அதிகாரங்களை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Occupational diseases

தொழிற்சார்ந்த நோய்கள்

(b) Payment of Gratuity

பணிக்கொடை வழங்குதல்

(c) Deposit Linked Insurance scheme

காப்பீடு திட்டத் தொடர்பான வைப்பீடு

(d) Available surplus

கிடைக்கக்கூடிய உபரித்தொகை

(e) Factory Inspector

தொழிற்சாலை ஆய்வாளர்

(f) Medical Benefit Council

மருத்துவ உதவி மன்றம்

(g) Leave with wages under the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் கீழ் சம்பளத்துடன் கூடிய விடுப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Kandan is employed in a textile mill and his monthly wages is Rs. 2,500. While working in the mill, he met with an accident and died on 15th May 2020. He was born on June 1970. Determine the quantum of compensation payable to him under the Employee's Compensation Act, 1923. (Relevant factor for age 49 and 50 is 156.47, 153.09 respectively)

கந்தன் என்பவர் ஒரு ஜவுளி ஆலையில் ரூ.2,500 மாத சம்பளத்திற்கு பணிபுரிகிறார். ஆலையில் பணி செய்து கொண்டிருக்கும் போது ஏற்பட்ட விபத்தில், 15.5.2020 அன்று இறந்து விடுகிறார். அவர் 1970 -ம் வருடம் ஜுன் மாதம் பிறந்தவர். 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டத்தின் கீழ் அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடுத் தொகையை தீர்மானிக்க. (வயது 49, மற்றும் 50-க்குரிய தொடர்புடைய காரணிகள் முறையே 156.47, 153.09)

9. Ravi is a senior manager in a transport corporation. He resigned his job after rendering five years of continuous service. After his resignation, he never handed over the office quarters to the corporation. Hence the corporation withheld the gratuity amount payable to Ravi. Is the action of the corporation justified?

ரவி என்பவர் ஒரு போக்குவரத்து கழகத்தின் முதுநிலை மேலாளர் ஆவார். ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான பணி செய்த பிறகு அவர் தன்னுடைய வேலையை ராஜினாமா செய்கிறார். தன்னுடைய ராஜினாமாவுக்கு பிறகு அவர் ஒரு போதும் அலுவலக குடியிருப்பை போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கவில்லை. ஆகையால் போக்குவரத்துக் கழகம் ரவிக்கு கொடுக்க வேண்டிய பணிக் கொடையை, நிறுத்தி வைக்கிறது. போக்குவரத்துக் கழகத்தின் இந்த நடவடிக்கை சரியானதா?

10. In a tea factory, there are 100 workers employed. Among them 40 are women workers and about 30 are married. The women workers demanded Creche facility from the tea factory management. Decide.

ஒரு தேயிலை தொழிற்சாலையில் மொத்தம் 100 பேர் பணிபுரிகிறார்கள். இவர்களில் 40 பெண் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் 30 பேர் திருமணம் ஆனவர்கள். அங்கு பணிபுரியும் பெண் தொழிலாளர்கள், குழந்தைகள் காப்பகம் வேண்டி தேயிலை தோட்ட நிர்வாகத்திடம் முறையிடுகிறார்கள். முடிவு செய்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5E**

**5740–23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Input Tax Credit (ITC)? What are the conditions which are required to be fulfilled for claiming ITC?

   செலுத்தப்பட்ட வரி வரவு என்றால் என்ன? செலுத்தப்பட்ட வரி வரவு கோர வேண்டுமெனில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?

2. Enumerate the rules relating to computation of Income from salary.

   சம்பளத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை கணக்கிடும் முறைகளை தொகுக்கவும்.

3. When is a sale or purchase said to take place in the course of Interstate trade or commerce? Explain with decided cases.

   எப்பொழுது சரக்குகளின் விற்பனை அல்லது வாங்குதல் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் அல்லது வர்த்தகமாகக் கருதப்படுகின்றது? தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் மூலம் விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Tax. What are the Canons of Taxations?

   வரி என்பதை வரையறு. வரியின் விதிமுறைகள் பற்றி விளக்குக.

5. Who is not ordinarily resident in India?

   இந்தியாவில் சாதாரணமாக குடியிருக்காதவர் யார்?

6. Explain the concept of "Imports" and "Imported" with reference to the provisions of the Customs Act, 1962.

   சுங்க வரிச்சட்டம் 1962-ன் கீழ் ''இறக்குமதி'' மற்றும் ''இறக்குமதி செய்யப்பட்டது'' தொடர்பான கருத்துப் பற்றிய பிரிவுகளை விவரமாக விளக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) GST Council.

சரக்கு மற்றும் சேவை வரிக் குழு.

(b) Composite supply.

கூட்டு வழங்கல்.

(c) Zero Rated Supply.

பூஜ்ய வரி வழங்கல்.

(d) Deductions from Salary.

சம்பள வருமானத்திலிருந்து கழிவுகள்.

(e) Ordinary resident under the Income Tax Act.

வருமான வரிச் சட்டத்தில் வழக்கமாக குடியிருப்பவர்.

(f) Previous year.

முந்தைய ஆண்டு.

(g) Pension.

ஓய்வூதியம்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Raju is working as an Assistant Professor in Chennai. His monthly income and deductions are as follows:

| Income | Rs. | Deductions | Rs. |
|---|---|---|---|
| Basic pay | 40,000 | CPS | 4,200 |
| D.A. | 26,000 | SPF | 140 |
| H.R.A. | 18,000 | NHIS | 250 |
| M.A. | 600 | | |
| | 84,600 | | 4,590 |

He pays a house rent of Rs.9,000 per month. He pays Rs.2,000 per half-yearly for LIC policy premium. Calculate the tax liability for the assessment year 2023-2024.

திரு. ராஜு உதவிப் பேராசிரியராக சென்னையில் பணிபுரிந்து வருகிறார். அவருடைய வருமானம் மற்றும் பிடித்தம் பின்வருமாறு:

| வருமானம் | ரூ. | பிடித்தம் | ரூ. |
|---|---|---|---|
| அடிப்படை சம்பளம் | 40,000 | ஓய்வூதியத் திட்டம் | 4,200 |
| அகவிலைப் படி | 26,000 | சிறப்பு சேமநல நிதி | 140 |
| வீட்டுப்படி | 18,000 | புதிய மருத்துவ நலத்திட்டம் | 250 |
| மருத்துவபடி | 600 | | |
| | 84,600 | | 4,590 |

அவர் வீட்டு வாடகையாக மாதம் ரூ.9,000 செலுத்துகிறார். ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு ரூபாய் 2,000 அரையாண்டிற்கு ஒருமுறை செலுத்துகிறார். வரிவிதிப்பு ஆண்டு 2023-2024க்கு அவர் செலுத்த வேண்டிய வரியினை கணக்கிடுக.

9. Vijay was born in Seattle in 2000. He has been staying in Canada since 2015. He comes to India for the first time on 13.10.2018 and returns to Canada on 30.03.2019. Again he returned to India on 20.04.2022 and returns to Canada 20.12.2022. Determine his residential status for the assessment year 2023-2024.

   2000-ல் விஜய் என்பவர் சியாட்டல் நகரில் பிறந்தார். 2015-லிருந்து கனடாவில் வசித்து வருகிறார். 13.10.2018 அன்று இந்தியாவிற்கு முதன் முறையாக வருகிறார். மீண்டும் கனடாவிற்கு 30.03.2019 அன்று சென்றுவிட்டார். 20.04.2022 அன்று இந்தியாவிற்கு மீண்டும் திரும்ப வருகிறார். மீண்டும் 20.12.2022 அன்று கனடா சென்றுவிடுகிறார். விஜய்யின் குடியிருப்பு நிலையினை வரிவிதிப்பு ஆண்டு 2023-2024க்கு கண்டறிக.

10. Mr. X who is an employee of State Government, retires on 31.05.2022. He gets 1/3rd of his pension commuted for Rs.9,00,000. Compute the exempted amount of pension.

    Mr. X மாநில அரசின் ஊழியர். அவர் 31.05.2022-ல் பணி ஓய்வு பெறுகிறார். அவர் ஓய்வு பெறும்பொழுது 1/3 பங்கு ஓய்வூதியம் ரூபாய் 9,00,000 மொத்த ஓய்வூதிய தொகையாக பெறுகிறார். அவரின் வரிவிலக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதிய தொகை எவ்வளவு?

---